06.03.2021
பெரம்பலூர்.

# அறிவிப்பு

## சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தன்னார்வலர்கள் விண்ணப்பிக்கலாம்

பெரம்பலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் பாமர மக்களுக்கு சட்ட உதவி வழங்கும் வகையில் 50 சட்ட தன்னார்வத் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

தகுதியானவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட), ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள், M.S.W பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவ பணியாளர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs) மற்றும் சமூக தொண்டு புரியும் அடிப்படை கல்வி தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். குறைந்தபட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு மேலும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் நிர்ணயிக்கப்படும் கௌரவ ஊதியம் தவிர தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கு பணி சம்பளமோ, ஊதியமோ, கூலியோ எதுவும் கிடையாது.

விருப்பமுள்ளவர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, பெரம்பலூர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது **http://districts.ecourts.gov.in/perambalur** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, பெரம்பலூர் அலுவலகத்தில் விண்ணப்பத்தினை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வருகின்ற மார்ச்' ௨௨–ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு : நேர்காணலுக்கான தேதி பற்றிய அறிவிப்பு மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:

தலைவர் / முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
பெரம்பலூர் – 621704.

M.V. 6.3.2021

செயலாளர் / சார்பு நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
பெரம்பலூர்.

https://www.freshersnow.com/tamilnadu-govt-jobs/

விண்ணப்பதாரர் புகைப்படம் (சுய சான்றொப்பம் இடவும்)

# சட்ட தன்னார்வலர்களுக்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 6. | விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் | : | |
| 7. | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 8. | தகவல் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 9. | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 10. | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம். | | |
| 11. | விண்ணப்பிக்கும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் பெயர் | : | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்